செய்தி வெளியீடு எண் : 1400 நாள் : 10.09.2024

# மகாகவி பாரதியார் நினைவு நாள் (மகாகவி நாள்) சென்னை மாகாண மேனாள் முதலமைச்சர் டாக்டர். ப. சுப்பராயன் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று அவர்களுடைய திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாளை (மகாகவி நாள்) முன்னிட்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், 11.9.2024 அன்று காலை 9.20 மணியளவில் சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கும்,

அதனைத் தொடர்ந்து, சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, 11,9,2024 அன்று காலை 9.50 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

மகாகவி பாரதியார் அவர்கள் 11.12.1882 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயர் – இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவரது கவிப்புலமையைப் பாராட்டி எட்டயபுர மன்னர் இவருக்கு "பாரதி" என்ற பட்டம் வழங்கினார். நவீன தமிழ் கவிஞர்களின் முன்னோடியாகவும், தமிழ் மொழியில் சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்ந்த இவரை "மகாகவி" எனும் புனைபெயர் கொண்டு அழைக்கப் பெற்றார். தந்தை இறந்த பிறகு சில காலம் பாரதியார் காசியில் வாழ்ந்தார்.

மகாகவி பாரதியார் தமிழ், இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் புலமை பெற்று விளங்கினார். மகாகவி பாரதியார் பல மொழிகளை கற்றறிந்தாலும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமிழின் பெருமையை உலகறியச் செய்தார். மதுரை சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1904 முதல் 1906 வரை "சுதேச மித்திரன்" பத்திரிகையில் பணியாற்றினார். 1907 ஆம் ஆண்டு இந்தியா என்ற வார இதழையும், பாலபாரதம் என்ற ஆங்கிலே இதழையும் பொறுப்பேற்று நடத்தினார்.

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற காவியங்களை படைத்தார். கீதையை தமிழில் மொழி பெயர்த்தார். மகாகவி பாரதியார் தமிழ்ப்பற்று, தெய்வப்பற்று, தேசப்பற்று, மானுடப்பற்று ஆகிய நான்கும் கலந்தவர். மகாகவி பாரதியார் மறைந்து நூறு ஆண்டுகள் கடந்தும், தமிழ் சமுதாயத்திற்காக அவர் விட்டுச்

சென்ற கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் உயிரோட்டமாக இருக்கும். பேரறிஞர் அண்ணா அவர்களால், "மக்கள் கவி" என்று அழைக்கப்பட்டார் மகாகவி பாரதியார்.

பாரதியாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கையால், ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டார். 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாள் மறைந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த இல்லத்தை 12.5.1973 அன்று அரசுடைமையாக்கப்பட்டு நினைவு இல்லமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரதியின் நினைவு நாளான செப்டம்பர் 11.9.2024 அன்று "மகாகவி நாள்"–ஆக கடைப்பிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் "மகாகவி நாள்" ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டின், மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாளான 11.9.2024 அன்று காலை 9.20 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள்.

சென்னை மாகாண மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் குமாரமங்கலத்திற்கு அருகேயுள்ள போக்கம்பாளையத்தில் பிறந்தார். இவர் ஜமீன்தார் குடும்பத்தைச் சார்ந்தவர். சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், இலண்டன் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும், அயர்லாந்து டப்ளின் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வி பட்டமும் பெற்றார். இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு இவரது வகுப்பு தோழர் என்பது குறிப்பிடத்தக்கது.

1918 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் சென்னை மாகாணத்தின் உள்ளாட்சித் துறை அமைச்சர், கல்வி மற்றும் சட்ட அமைச்சர், உள்துறை அமைச்சர், சட்டமன்ற மேலவை உறுப்பினர். இந்தோனேசியாவிற்கான இந்தியத் தூதுவர், இந்திய நாடாளுமன்ற கீழவை உறுப்பினர், மேலவை உறுப்பினர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பதவி வகித்தார். இவரது ஆட்சிக் காலத்தில், முதல்முறையாக அரசாங்கப் பணிகளில் வகுப்புவாரி பிரநிதித்துவ அடிப்படையில் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திற்கு மாநில சுயாட்சி வழங்கப்பட்டபின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மூதறிஞர் இராஜாஜி அமைச்சரவையில் சட்டம் மற்றும்

கல்வித் துறை அமைச்சராகப் பதவி வகித்தார். 1942–இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கு கொண்டு சிறை சென்றார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஒன்றிய அரசின் தபால் துறை அமைச்சராக திகழ்ந்த இவர் திருவள்ளுவர் மற்றும் பாரதியாரின் புகைப்படத்துடன் கூடிய தபால் தலைகளை வெளியிடச் செய்தார். அனைத்து தபால் துறை படிவங்களையும், தமிழ் மொழியிலும் கிடைக்கச் செய்தார். இந்தியப் பாராளுமன்றத்தில் திருவள்ளுவர் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டதும் இவர் காலத்தில்தான்.

தமிழுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அயராது உழைத்தவரான சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அவரது திருவுருவச்சிலையை நிறுவி 5.9.2023 அன்று திறந்து வைத்தார்கள்.

சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 11 ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின், டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் பிறந்தநாளான 11.9.2024 அன்று காலை 9.50 மணியளவில் சென்னை, கிண்டி, காந்திமண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்

இந்நிகழ்ச்சிகளில், மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu